بسم الله الرحمن الرحيم

## ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் – அல்லாஹ் தனது வல்லமைமிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக) அவர்கள் பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 03.10.2014 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

Summary of the Friday Sermon - 3, Oct 2014 (Tamil)

# ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹுத் தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களின் அயர்லாந்து சுற்றுப்பயணம்

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:–

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் கூறுகின்றார்கள்;இஸ்லாமிய போதனையின்படி இஸ்லாமிய மார்க்கம் இரண்டு பெரிய குறிக்கோள்களை உள்ளடக்கியுள்ளன. ஒன்று, ஓரிறைவனை அவன் உண்மையில் உள்ளதுபோல் அறிவது, அவனுடன் நேசம் கொள்வது, அவனது உண்மையான கட்டுப்படுதலில் தம்மை கட்டுப்படுதல் மற்றும் நேசத்தின் நிபந்தனைக்கேற்றவாறு ஈடுபடுத்துதல். இரண்டாவது குறிக்கோள், அவனது அடியார்களின் சேவை மற்றும் மனிதநேயத்தில் தமது அனைத்து ஆற்றல்களையும் செலவளித்தல். மேலும் அரசன் முதல் சாமானியன்வரை நலம்நாடுபவரோடு நன்றி மற்றும் பரிவுடன் பரிமாறுவதாகும்...

பிறகு அன்னார் கூறுகின்றார்கள்; இஸ்லாமிய போதனைகள் இரண்டு பாகங்களைக் கொண்டுள்ளது. ஒன்று அல்லாஹ்வின் உரிமைகள், மற்றொன்று அடியார்களின் உரிமைகள். அல்லாஹ்வின் உரிமை என்பது அவனை கட்டாய கட்டுப்படுதலுக்கு உரியவனாக கருதுவதாகும். அடியார்களின் உரிமைகள் என்பது இறை படைப்பினங்களுடன் மனிதாபிமானத்துடன் நடப்பதாகும். மார்க்க விரோதம் காரணமாக மட்டுமே எவருக்கேனும் துன்பமிழைப்பது சரியானமுறை கிடையாது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் தமது நூல்கள் மற்றும் மல்ஃபூஸாத்தில் வழங்கியுள்ள இதேபோன்ற நிறைய கூற்றுக்களும் எழுத்துக்களும் நமக்கு நமது கடமைகளின் பக்கம் கவனமூட்டுகின்றன. இதே அல்லாஹ்வின் உரிமைகள் மற்றும் அடியார்களின் உரிமைகளை நிலைநாட்டும் போதனைகள் உள்ளன. இன்று உலகிற்கு அதற்கான தேவை உள்ளது. இதே போதனையை நாம் உலகிற்கு முன்னால் எடுத்துவைக்கும் போது உலகம் வியப்பில் ஆழ்ந்துவிடுகிறது.

மேலும் அவர்களுக்கு இஸ்லாமிய போதனைகளின் உட்கூறுகளை இன்னும் விரிவாக எடுத்துவைக்கும் போது கேட்பவர்கள் மேலும் வியந்துபோகின்றனர். ஏனென்றால் பொதுவாக முஸ்லிமல்லாத உலகம் இஸ்லாத்தின் விரோதிகளிடமிருந்து இஸ்லாம் பற்றி, இஸ்லாம் கடுமைகாட்டக்கூடிய, உரிமகளைப் பறிக்கக்கூடிய மார்க்கம் என்ற விஷயங்களையே கேட்டுவந்துள்ளனர். மேலும் தங்களின் சான்றுகளை முஸ்லிம் பிரிவுகளின் செயல்முன்மாதிரியாக துரதிஷ்டவசமாக சிலமுஸ்லிம் பிரிவுகள் மற்றும் நபர்கள் காண்பித்து வருவதுபோல் முன்வைத்து பேசுகின்றனர். ஆனால் நான் கூறியதுபோல் இஸ்லாமிய போதனையின் உண்மைநிலையை திருக்குர்ஆனிலிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் அழகிய நடைமுறையிலிருந்தும் கலீஃபாக்கள் மற்றும் நபித்தோழர்களின் முன்மாதிரியிலிருந்தும் முன்வைக்கப்பட்டால் அவர்களுக்கு தெரிந்துவிடும். இந்த போதனையை நடைமுறைப்படுத்த இக்காலத்தில் அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களை அனுப்பியுள்ளான், அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் அதனை பரப்பி அதன்படி நடக்கவும் முயற்சிசெய்கின்றது என்பதை எடுத்துக்கூறினால் உலகின் கவனம் ஜமாஅத்தின் பக்கம் திரும்புகின்றது. நான் பார்த்துள்ளேன்,எதிரிகளிடம் எதிரிகளுக்கு

முன்னாலும் அழகிய முறையில் இந்த போதனையை முன்வைத்து செயல்ரீதியான முன்மாதிரிக்கான முயற்சியும் மேற்கொண்டால் ஒரு அசாதாரண தாக்கம் மக்களிடம் ஏற்படும்.

எவ்வாறாயினும் இப்போது நான் அதன் விளக்கங்களின் பக்கம் செல்லாமல் கடந்த நாட்களில் அயர்லாந்து அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் முறையான முதல் பள்ளிவாசல் திறந்து வைக்கப்பட்டது. நீங்கள் அனைவரும் எனது குத்பாவையும் அங்கிருந்து கேட்டிருப்பீர்கள். அதன்பிறகு மாலையில் வரவேற்பு நிகழ்சி இருந்தது. அதுவும் நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டது. அதனையும் கேட்டிருப்பீர்கள். அதில் நாஇஸ்லாமிய போதனையின் அடிப்படையில் சிலவிஷயங்களை கூறினேன். மேலும் பொதுவாக அதில் நான் இவ்வாறான விஷயங்களையே கூறுவேன். அவற்றால் பிறரிடத்தில் அசாதாரண தாக்கமும் ஏற்படுகின்றது.அங்கு கால்வே அயர்லாந்திலும் வந்திருந்த நமது விருந்தினர்களுக்கு நல்ல தாக்கம் ஏற்பட்டது. அதுமட்டுமின்றி பத்திரிக்கைகளின் பேட்டி, அரசியல்வாதிகள் மற்றும் படித்தவர்களுடன் இஸ்லாமிய போதனைகளின் அடிப்படையில் பேசப்பட்டது. அவர்கள்மீதும் தாக்கம் ஏற்பட்டது, அதனை ஒவ்வொருவரும் வெளிப்படுத்தினர். அயிரஷ் மக்களின் சிறப்பு அம்சம், அவர்கள் ஒப்புதல் அல்லது மறுப்பை வெளிப்படையாக தெரிவித்து விடுவதாகும். அல்லது அவ்விஷயம் பிடிக்க வில்லையென்றால் அமைதி காத்துவிடுகின்றனர். தேவையற்ற விமர்சனங்கள் செய்வதில்லை.

ஆக இன்று அந் சுற்றுப்பயணத்தின் அடிப்படையில் அந்த மக்களின் சிலவிஷயங்களையும் சில நல்விளைவுகளையும் கூறுவேன். மேலும் எவ்வாறு அல்லாஹ் ஜமாஅத்தின் அறிமுகத்தை, இஸ்லாத்தின் உண்மையான போதனையைப் பரப்ப வாய்ப்பளிக்கின்றான் என்பதை அவற்றைப் பார்க்கும்போது கேட்கும்போது அல்லாஹ்வைப் புகழ்வதின் பக்கம் கவனம் பிறக்கின்றது. அயர்லாந்தை நான் சென்றடைந்த மறுநாள் ஜமாஅத் பாராளுமன்ற வளாகத்தில் சபாநாயகர் மற்றும் பல உறுப்பினர்களுடனான சந்திப்பிற்கு நிகழ்சியை நல்ல சூழலில் வைத்திருந்தது. அயர்லாந்தின் தேசிய பாரரளுமன்ற சபாநாயகருடனான சந்திப்பின்போது அவர் கூறினார்; எனக்கு ஜமாஅத் பற்றிய அறிமுகம் உண்டு. தாங்களின் ஜமாஅத்தின் பணிகளை மதிப்புமிக்கதாக பார்க்கின்றேன். இந்த ஜமாஅத் இங்கு சிறிதாக இருந்தாலும் இறையருளால் பெரும் செயலாற்றுவதாக உள்ளது. இவ்வாறு அவருடன் பேச்சுநடந்தது. ஜமாஅத் ஆப்ரிக்க நாடுகளில் செய்துவரும் சேவைகள்பற்றி, எவ்வாறு நாம் மருத்துவமனை மற்றும் பள்ளிக்கூடம் நடத்துகின்றோம் என்பவற்றை நான் அவருக்கு தெரிவித்தேன். ஏழைமக்களுக்கு குடிநீர்வசதி செய்யப்படுகிறது. இன்னும்பிற பிற அடிப்படை பணிகள் அனைத்தும் எவ்வித பாகுபாடுமின்றி நடைபெறுகிறது. அவரை வியப்பிற்குள்ளாக்கிய விஷயமாவது, நான் அவருக்கு கூறினேன், நமது பள்ளிகளில் மார்க்ககல்வியும் கற்பிக்கப்படுகின்றது. ஆனால் அதில் சுதந்திரம் வழங்கப்படடுள்ளது. எந்த பலவந்தமும் கிடையாது என்பதாகும். ஒருவர் கேள்வி எழுப்பினார்,பிற ஜமாஅத்தைச்சார்ந்த அல்லது அஹ்மதியல்லாத ஜமாஅத்திற்கு எதிரான ஆலிம்கள் அல்லது தலைவர்களுடன் அமர்ந்து ஏதேனும் சந்தர்ப்பத்தில் பேசும் சந்தர்ப்பம் ஏற்பட்டதா அல்லது ஏற்படுத்தப்படுமா?. நான் கூறினேன்; நாம் எப்போதும் தயாராகவே உள்ளோம். மேலும் நீங்கள் இவ்வாறான சந்தர்ப்பத்தை ஏற்படுத்தினால் நாங்கள் அங்குவரவும் தயாராக உள்ளோம். எனக்கு தெரியும் அவர்கள் வரமாட்டார்கள்.

பிறகு பெண்களின் சுதந்திரம்பற்றி பேச்சு நடைபெற்றது. அவர்களுக்கு எடுத்துக்கூறப்பட்டது. இதனால் அவர்களுக்கு போதிய திருப்தியும் ஏற்பட்டது. பிறகு பிரிவு அமைப்புகள் பற்றி ஷியா சன்னிகள் ஏன்? என அவர்கள் கேள்வி எழுப்பினர். அதற்கு நான் அவர்களிடம் கூறினேன், எவ்வாறு யூதர்களும் கிறித்தவர்களும் பிரிவுகளாக பிரிந்துள்ளரோ அதேபோல்தான் இஸ்லாத்திலும் உள்ளனர். ஆனால் இஸ்லாத்தில் இந்தப் பிரிவுகளின் முன்னறிவிப்பு முன்னதாகவே உள்ளது. மேலும் இதுதான் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றத்திற்கான காரணமாகும். ஏனென்றால் வரவிருப்பவர் இந்த அனைத்து பிரிவுகளையும் ஒன்றிணைக்கவேண்டியுள்ளது. இப்பணியை அல்லாஹ்வின் அருளால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் செய்துவருகின்றது.

துணைமேயர் கால்வே காவுன்டி அவர்கள் கூறினார், பலதரப்பட்ட கொள்கைகளையுடைய மக்களை ஒரே இடத்தில் ஒன்றாக பார்ப்பது பெரும் மகிழ்சியளிக்கும் விஷயமாகும். பிறகு பாராளுமன்ற துணை சபாநாயகர் மைக்கேல் பைக்இட் கூறினார், பெரும் அழகிய நிகழ்சியாக இது இருந்தது. எனது தூதுச்செய்தி தொடர்பாகக் கூறினார், அன்பு மற்றும் அமைதி பற்றிய இந்த உரை எனக்கு மிகுந்த உற்சாகமூட்டுவதாக இருந்தது. இந்த உரையிலிருந்து அன்பின் தூது எவ்வளவு சக்திவாய்ந்தது என்பது விளங்குகின்றது. பிறகு ஒரு விருந்தினர் நிகழ்சிக்கு வந்திருந்தார் கூறினார், நான் மிகுந்த மகிழ்சியடைந்தேன். மேலும் தாங்களின் அன்பு மற்றும் அமைதியின் தூதால் நான் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்னேன். பிறகு ஒரு விருந்தினர் கூறினார், தற்போது மக்கள் இஸ்லாத்தினால் மிகுந்த அச்சத்திற்கு உள்ளாகியுள்ளனர் என்பதில் எந்த சந்தேகமும் இல்லை. ஆனால் இந்த நிகழ்சிக்குப்பின் எங்கள் அனைவருக்கும் மார்க்க சகிப்புத்தன்மைக்கான பாடம் வழங்கப்பட்டுள்ளது. கலீஃபா நமக்கு இஸ்லாம் மற்றும் திருக்குர்ஆனின் அன்பு மற்றும் அமைதிக்கான போதனைகளை நம் அனைவருக்கும் பெரும் திருப்தி ஏற்படும்விதமாக எடுத்துவைத்தார். இன்றைய நிகழ்சியில் நாங்கள் நிறைய விஷங்களை கற்றோம்.பிறகு ஜைனி மேக்லைன் எனும் விருந்தினர் எனது உரைபற்றி கூறுகின்றார், அவர் சில மிகமுக்கிய விஷயங்களைக் குறிப்பிட்டார். கூறினார், கலீஃபாவின் உரையைக் கேட்டுக்கொண்டிருந்த ஒவ்வொருவரும் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியவாறு காணப்பட்டார். பிறகு ஒரு விருந்தினரான பெண்மணி கூறினார், அமைதியின் தூது வழங்கப்பட்டது. ஜிஹாதின் விளக்கம் தரப்பட்டது. அதனால் நான் மிகுந்த தாக்கத்திற்கு உள்ளாகினேன். மேலும் பள்ளிவாசலின் பெயரே சமூகத்தின் பரஸ்பர ஒற்றுமையை ஊக்குவிக்கின்றது. இங்கு வந்து எனக்கு இஸ்லாம் பற்றிய ஒருபுதிய வகை தெரியவந்தது.

பிறகு கால்வே கவுன்டியின் ஒரு கவுன்சிலர் டாம் ஹீலே கூறுகின்றார், தாங்களின் தூதை முழுஉலகிலும் அல்லாஹ் எட்டவைப்பானாக, மேலும் நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் உண்மையான தோழர்களாக ஆக்குவானாக. பிறகு ஒரு பெண்விருந்தினர் அவர் எஜுகேஷன் ஃபவுன்டேஷன் டப்லின் உடைய துணைத்தலைவர் கூறினார், எனக்கு இந்த பள்ளிவாசலின் பெயர் மர்யம் என வைத்திருப்பது மிகவும் பிடித்துள்ளது. இந்த உரையிலிருந்து எனக்கு இஸ்லாத்தில் மர்யமின் தகுதி என்ன, திருக்குர்ஆனில் ஹஸ்ரத் மர்யம்(அலை) அவர்களின் சிறப்புகள் கூறப்பட்டுள்ளன என்பன தெரியவந்தது. என்னைப்பொறுத்தவரை இது இஸ்லாத்திற்கு எதிராக பேசும் அந்த அனைத்து கிறித்துவர்களுக்கும் கூறவேண்டிய மிகவும் கவர்ந்திழுக்கும் விஷயமாகும். இஸ்லாம் தொடர்பாக எனக்கு இவ்வளவு அறிவு இருக்கவில்லை. ஆனால் கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் உரையைக் கேட்டபின் இப்போது எனக்கு இஸ்லாம்பற்றிய மேலான எண்ணம் நிலைபெற்றுவிட்டது.

ஒரு பெண்எழுத்தாளர் மிஸ் பர் வந்திருந்தார். கூறினார், இன்றைக்கு முன்புவரை இஸ்லாம்பற்றி முற்றிலும் அறியாமல் இருந்தேன். நான் இன்றைய முழு நாளும் மர்யம் பள்ளிவாசலில் கழித்தேன். கலீஃபாவின் ஜும்ஆ உரை மற்றும் மர்யம் பள்ளிவாசலின் திறப்புவிழா உரைகளைக் கேட்டேன். இவற்றிலிருந்து நான் தெரிந்துகொண்டதாவது இஸ்லாம் அமைதியின் மார்க்கமாகும். பிறகு ஒரு பத்திரிக்கையாளர் கூறுகின்றார், இந்த உரை சிந்திக்க நிர்பந்திக்கின்றது. உரையில் அவர்கள் இஸ்லாம் அஹ்மதிய்யதை விவரித்தார்கள். சில கடினமானவர்கள் அதனை சிதைத்துவிட்டனர். மேலும் மிகமிக அழகிய முறையில் இஸ்லாத்தின் அமைதி, அன்பு மற்றும் சகிப்புத்தன்மையின் போதனைகளை முன்வைத்தார்கள். இந்த உரை உள்ளம் கவர்ந்ததாகவும் தெளிவாகவும் இருந்தது. இதனைக் கேட்டதனால் அதிக அறிவு கிடைக்கப்பெற்றது.

அயர்லாந்து சட்டசபை உறுப்பினரான ஒரு விருந்தினர் கூறினார், முதலில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன், எனது பகுதியில் நிறைய மக்களை எனக்கு தெரியும். உள்ளூர் அளவில் நல்ல துடிப்பானவர்களாவர். இந்த அனைத்து அஹ்மதிகளும் நமது சமூகத்தில் பெரும் பங்காற்றுகின்றனர். ஜமாஅத்தின் பெண்கள் அமைப்பும் நமக்கு சூரிட்டி அளிக்கின்றது. பிறகு கால்வே காவுன்டியின் டிவிஷன் சூப்பிரண்டு போலீஸ் கூறினார், இதில் பங்கேற்பது என்பது எனக்கு கவுரவமான விஷயமாகும். எக்கு

மிகநன்றாக தெரியும் அஹ்மதி இஸ்லாமியர்கள் பலவந்தத்தின்மீது நம்பிக்கை வைப்பதில்லை. இதன் காரணமாகவே இன்று அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் இப்பள்ளிவாசலின் பெயராக ஹஸ்ரத் மர்யம்(அலை) அவர்களின் பெயரை வைத்துள்ளது.

பிறகு ஒரு அரசியல் விருந்திரான அஹ்மது சாஹிப் பெரும் அரசியல் தலைவர் ஆவார், கூறினார், 2010ஆம் ஆண்டில் எனக்கு அடிக்கல் நாட்டுவிழாவில் பங்கேற்கும் வாய்ப்பு கிடைத்தது. இன்று இந்த பள்ளிவாசல் முழுமைபெற்று நான் திறப்புவிழாவிற்கு வந்திருப்பது எனக்கு மகிழ்சியளிக்கின்றது. ஜமாஅத்தின் அன்பு மற்றும் நேசத்தின் போதனையால் பெரும் தாக்கத்திற்கு உள்ளாகியுள்ளோம். பள்ளிவாசலின் சவுண்ட் சிஸ்டம் அமைப்பின் உரிமையாளர் ஒருகிறித்தவராவார் கூறினார், இங்கு வந்து நான் உணர்ந்ததாவது, எனது வாழ்கையில் ஒரு மாற்றம் நிகழ்கிறது. எனக்கு பள்ளிவாசலுக்கு வந்ததால் ஒருநிம்மதி ஏற்படுகிறது.

பிறகு ஆர் டி ரேடியோ சேனல் உள்ளது. ஆர் டி டி வி இங்கும் ஸ்கையில் வருகிறது. அதனை கேட்பவர்களின் எண்ணிக்கை பத்துலட்சமாகும். அது ஜும்ஆவையும் பதிவு செய்திருந்தது. ஜும்ஆவிற்குப்பின் எனது பேட்டியையும் எடுத்தது. அவற்றை அது தனது நிகழ்சியில் எவ்வித எடிட்டும் செய்யாமல் அப்படியே ஒளிபரப்பியது. பிறகு ஆர் டி ஒன் இன் பிரதிநிதி பேட்டி எடுத்தார். அவர் இஸ்லாம் தொடர்பாக கேட்டார், உங்களது முழக்கம் எல்லோரிடத்தும் அன்பு எவரிடத்தும் பகையில்லை என்தாக உள்ளது. மேலும் முஸ்லிம் உலகில் நடப்பவை உங்களை கவலை அல்லது கஷ்டத்தில் ஆழ்தவில்லையா? அதற்கு இதனையே கூறினேன், இஸ்லாம் கற்பிப்பதாவது எவருடைய உரிமையையும் பறிக்காதீர்கள், எவர்மீதும் அநீதியிழைக்காதீர்கள் என்பதாகும். நாங்கள் இஸ்லாத்தின் உண்மையான போதனையின்படி இதனடிப்படையில் நடப்பவர்களாவோம். இது எங்களது குறிக்கோளாகும். பிறகு அவர்கேட்டார், உலகநிலை தொடர்பாக தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?. நான் கூறினேன், உலகம் எந்தளவிற்கு படுவேகமாக குழப்பங்களில் சிக்கிவருகின்றதோ அதில் இஸ்லாமிய நாடுகள் மட்டும் தொடர்புடையதாக இல்லை. மாறாக அதில் ஐரோப்பிய நாடுகளும் அங்கம்வகிக்கின்றன. இப்போது இந்த சுழலின் வேகம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. பொறுமை நிதானம் இல்லையென்றால் அமைதியை நிலைநாட்டும் முயற்சி சரியாக செய்யப்படவில்லையென்றால் பிறகு ஒருமாபெரும் அழிவு வரும். அதனை கட்டுப்படுத்துவது கடினமாகதாகிவிடும். இந்த அழிவு மூன்றாம் உலகப்போராகும். இதனையும் அது தனது செய்திகளில் கூறியது.

இதேபோல் அயர்லாந்து ஜமாஅத்தின் தலைவர் மற்றும் முபல்லிக் இன்சார்ஜ் ஆகியோரின் பேட்டியையும் அது எடுத்தது. பிறகு கால்வே எஃப் எம் ரேடியோவும் ஒலிபரப்பியது. அதன் கேட்பவர்களின் ண்ணிக்கை 135000 ஆகும். பிறகு அயர்லாந்தின் தேசிய பத்திரிக்கை அயர்ஷ் டைம்சும் 29செப்டம்பர் அன்று முழு நிகழ்சியையும் முக்கால் பக்கத்திற்கு பள்ளிவாசலின் பெரிய போட்டோ உடன் எனது போட்டோவையும் போட்டு வெளியிட்டது. அது வந்து பேட்டியும் கண்டது. பேட்டியின் அடிப்படையில் சில கருத்துக்களையும் அது வெளியிட்டது. அந்த பத்திரிக்கையின் வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை 181000 ஆகும். இணையதளத்தில் ஏறக்குறைய 486000 க்கும் அதிகமானவர்கள் படிக்கின்றார்கள்.

ஆகவே நாம் ஓரிடத்தில் பள்ளிவாசல் கட்டும்போது அல்லாஹ்வின்புறமிருந்து இஸ்லாத்தின் உண்மையான போதனை பரவுவதற்கான அசாத்திய ஏற்பாடுகளும் தோன்றிவிடுகின்றன, அல்லாஹ்வின் உதவிகள் வெளிப்படுகின்றன. மேலும் எனது சுற்றுப் பயணங்களையும் அசாத்திய அருள்நிறைந்ததாக அவன் ஆக்கினான், இதுவும் அல்லாஹ்வின் பேருபகாரமாகும். இவ்வணைத்து பரக்கத்துக்கள், உதவிகள் தப்லீக் மற்றும் அறிமுகத்திற்கான புதிய வழிகளாகும். இவை அல்லாஹ் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களுக்கு வழங்கிய அந்த வாக்குறுதிகளின் அடிப்படையிலாகும். நமது முயற்சிகள் மிகவும் சாதாரனமானதேயாகும். அல்லாஹ்வின் எண்ணிலடங்கா அருள் உடன் உள்ளது. அவற்றால் ஒவ்வொரு அஹ்மதியும் ஈமான் மற்றும் நம்பிக்கையில் மென்மேலும் வலுப்பெறுகின்றனர். வலுப்பெறவும் வேண்டும். ஹஸ்ரத்

வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்கள் ஓரிடத்தில் கூறுகின்றார்கள், வியப்பாக உள்ளது, அல்லாஹ் சத்தியத்தை பிரகாசிக்கவைக்க நமது இந்த ஜமாஅத்திற்கு சாதகமாக எந்தளவிற்கு அதிகமதிகமாக அழுத்தம் கொடுக்கின்றான். இருந்தும் அந்த மக்களின் கண்கள் திறப்பதில்லை. கூறினார்கள், இதுவும் இறைநடைமுறையாகும், பொய்ப்படுத்துபர்களின் பொய்மை அல்லாஹ்வின் அடையாளங்களை ஈர்க்கின்றன.

எவ்வாறிருப்பினும் அல்லாஹ் இந்த பெயர்தாங்கிய ஆலிம்கள் மற்றும் சுயநல தலைவர்களின் காட்டிலிருந்து இந்த முஸ்லிம்களை வெளியேற்றி இஸ்லாத்தின் அழகிய போதனையின்படி நடப்பவர்களாக அதனைப் பரப்புபவர்களாக ஆக்குவானா. இந்த நோக்கத்திற்காக அல்லாஹ் அனுப்பிய இந்த இமாமை ஏற்பவர்களாக ஆக்குவானக. நம்மை அவர்கள் ஷஹீதாக்குகின்றனர். ஒருவர் ஷஹீதாகின்றார். ஆனால் அதற்கு பகரமாக அவர்களுக்கு நிம்மதி கிடைக்கின்றதா. அவர்களில் நூற்றுக்கணக்கானவர்கள் தினந்தோறும் இல்லையென்றாலும் குறைந்தது வாரத்திற்கு மரணிக்கின்றனர். பாகிஸ்தாயையே பாருங்கள், குழப்பம், எல்லா திசையிலும் நிம்மதியின்மை. ஆகவே அல்லாஹ் நமக்கு நமது கடமைகளை முழுமையாக அழகிய முறையில் நிறைவேற்றுவதற்கா வாய்ப்பை வழங்கியருள்வானாக.

இன்றும் நான் ஒரு ஷஹீதின் ஜனாஸா தொழுகை தொழவைப்பேன். மேலும் இரண்டு ஜனாஸாக்களும் உள்ளன. ஒன்று ஜனாஸா ஹாஸிர் ஆகும். முதலில் டாக்டர் ருபைனா கரீம் சாஹிபா ஜனாஸாவுடன் அனைத்து ஜனாஸாக்களும் இருக்கும். இவர் அயர்லாந்தின் டாக்டர் அப்துல் மன்அம் சாஹிப் அவர்களின் மனைவியாவார். இவர்27 செப்டம்பரில் இறைவனடி சேர்ந்தார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலாஹி ராஜிவூன். ராவல்பிண்டியின் மதிப்பிற்குரிய குரைஷி முஹம்மது சாஹிபின் மகளாவார்.ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ்(அலை) அவர்களின் சஹாபி ஹஸ்ரத் ஹாஃபிஸ் முஹம்மது அமீன் சாஹிப் (ரலி) அவர்களின் பேத்தியாவார். இவர் திருமணம் முடித்து 2000த்தில் அயர்லாந்திற்கு வந்தார். இங்கு அயர்லாந்து ஜமாஅத்தில் நீண்டகாலம் அவருக்கு லஜ்னா பொதுச்செயலர், பொருளாராக தொண்டாற்றும் வாய்பு கிட்டியது. இதேபோல் 2009லிருந்து தனது மரணம்வரை எஸ்ட் ரீஜனின் உள்ளூர் லஜ்னா துணை த்தலைவியாகவும் இருந்துவந்தார்.

எந்த ஷஹீதைப்பற்றி நான் கூறினேனோ அவர் மீர்பூர் காஷ் சேட்டிலைட் டவுணின் மதிப்பிற்குரிய முஹம்மது ஜலாலுத்தீன் சாஹிபின் மகன் மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது கோஸா சாஹிப் ஆவார். அவரை 22 செப்டம்பரில் இரவு ஏழரை மணிக்கு அவருடை கிளீனிக்கில் பிராக்டீஸ் செய்துகொண்டிருந்தார். அவரை அடையாளம் தெரியாத நபர்கள் சுட்டு ஷஹீதாக்கிவிட்டனர்.இன்னாலில்லாஹி வ இன்னா இலாஹி ராஜிவூன். தகவல்களின்படி மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது மாலி சாஹிப் தனது கிளீனிக்கில் வழக்கம்போல் நோயாளிகளைப் பார்த்துக் கொண்டிருந்தார். இரண்டு அடையாளம் தெரியாத நபர்கள் பைக்கில் வந்தனர். அதில் ஒருவன் கிளீனிக்கில் நுழைந்து மதிப்பிற்குரிய முபஷ்ஷிர் அஹ்மது மாலி சாஹிபின் மீது சுட்டான். அதன்விளைவாக ஆறு ஏழு குண்டுகள் ஷஹீது மர்ஹூமின் தலை மற்றும் நெஞ்சின் மீது பாய்ந்தது. இதனால் சம்பவ இடத்திலேயே மரணித்துவிட்டார். ஷஹீது மர்ஹூம் அவர்கள் ஷஹாதத்தின்போது நவ் முபாயின் தர்பிய்யத் செயலராக தொண்டாற்றும் வாய்ப்பைப் பெற்றுவந்தார். இதுமட்டுமின்றி டாக்டர் சாஹிபிற்கு பல்வேறு கிளையமைப்புகள் மற்றும் ஜமாஅத்தின் பொறுப்புகளிலும் தொண்டாற்றும் கிடைத்தது. டாக்டர் அப்துல் மன்னான் சித்தீக் அவர்களின் அமீரக காலத்தில் மாவட்ட செயற்குழு உறுப்பினராக இருந்தார்கள். எந்த நவ் முபாயின் வந்தாலும் அவர்களின் உணவிற்கான ஏற்பாட்டைச் செய்வார்கள். அவர்களிடம் வாடகை இல்லாவிட்டால் தன் பையிலிருந்து வாடகையும் வழங்குவார்கள். பொதுத்தொண்டில் பெரும் ஆர்வம் கொண்டிருந்தார்கள். காஷ்மீரில் நிலநடுக்கம் வந்தபோது மருத்துவக் குழுவுடன் அங்கு சென்று 22 நாட்கள்வரை தொண்டாற்றும் வாப்பைப் பெற்றார்கள். இவ்வாறாக தியாகத்தின் களத்தில் முன்னிலை வகிப்பவராக இருந்தார்கள். விருந்தினரை உபசரிப்பவராக இருந்தார்கள். தமது நண்பர்கள் மற்றும் ஜமாஅத்தின் பொறுப்பாளர்களுக்கு

விருந்தளிப்பவராக இருந்தார்கள். மேலான எளிமையின் சொந்தக்காரராக விளங்கினார்கள். கிலாஃபத்துடன் எல்லையில்லா அன்பு மற்றும் நேசத்தின் தொடர்பு இருந்தது. கட்டுப்படுதலின் அசாதாரண உணர்வைக் கொண்டிருந்தார்கள். ஜமாஅத்தாக தொழுபவராகவும் நஃபில் தொழுபவராகவும் சலவாத்து ஓதுபவராகவும் இருந்தார்கள். எப்போதும் மென்மையாக பேசுபவராகவும் எப்போதும் இரக்கத்துடனும் பரிமாறுவார். உயர் நல்லொழுக்கதின் சொந்தக்காரராகவும் ஒழுக்க சீலராகவும் இருந்தார்கள். வயது 47. மூஸியாக இருந்தார்கள்.

மூன்றாம் ஜனாஸா அல்காஜா சிஸ்டர் நயீமா லத்தீஃப் சாஹிபா அவர்களுடையதாகும். இவர் மதிப்பிற்குரிய அல்ஹாஜ் ஜலாலுத்தீன் லத்தீஃப் சாஹிப் ஸாயின் ஜமாஅத்தின் தலைவரும் அமெரிக்க அன்சாருல்லாஹ் துனைத்தலைவரின் மனைவியுமாவார். சிறிது காலமாக கடுமையாக நோயுற்றிருந்தார். லுஹர் தொழுகைக்காக ஆயத்தமாகிக் கொண்டிருந்தபோது தனது உண்மை எஜமானிடம் சென்டைந்து விட்டார்கள். இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன். சிஸ்டர் நயீமா லத்தீஃப் 21 மே 1939 ல் ஒரு கிறித்துவ வீட்டில் பிறந்தார். அவர் வெஸ்ட் வெர்ஜீனியா பல்கலையில் கல்வி கற்று அமெரிக்இராணுவத்தின் மருத்துவப் பிரிவில் தன்னார்வத் தொண்டராக பணியைத் தொடங்கினார். போரின் நடுவே காயமுறும் இராணுவத்தினரை பார்க்கும் பணி மேற்கொண்டார். சமூகத்தில் தனது பொறுப்பை உணர்ந்த பெண்மணியாக அமைதியை விரும்பும் பெண்மணியாக விளங்கினார். 1974ல் அஹ்மதிய்யத்தை ஏற்றார்.

சுயமாக ஆராய்ந்து வேகமாக ஈமானிலும் நல்லோழுக்கத்திலும் முன்னேறினார். எதுவரையென்றால் 2000-இலண்டன் ஆண்டு மாநாட்டில் ஹஸ்ரத் நான்காவது கலீஃப்துல் மஸீஹ்(ரஹி) அவர்களை சந்தித்தபோது ஹுஸுர் கூறினார்கள், தாங்கள் பிறப்பு அஹ்மதி முஸ்லிமாக இருக்கிறீர்கள் என தெரியவருகிறது. சிஸ்டர் நயீமா அவர்கள் தமது வாழ்நாளில் ஒருபோதும் ஜும்ஆ தொழுகையை விட்டது கிடையாது. ஜமாஅத் நிகழ்சிகளில் முறையாக பங்கேற்பவராக இருந்தார்.

கிலாஃபத் மற்றும் காலத்தின் கலீஃபாவுடன் அளவிகடந்த அன்பும் நேசமும் இருந்தது. காலத்தின் கலீஃபாவிற்கு கட்டுப்படுவதற்கே முதன்மையும் முன்னுரிமையும் அளித்து வந்தார். ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்(ரஹி) அவர்களின் அமெரிக்க சுற்றுப்பயணத்தின் நடுவே ஒரு பல்கலைகழக்தில் பர்தாவின் சிறப்பு பற்றிய ஹஸ்ரத் மூன்றாவது கலீஃபத்துல் மஸீஹ்(ரஹி) அவர்களின் உரையைக்கேட்ட மாத்திரத்திலேயே பர்தாவை எடுத்துக்கொண்டார். மேலும் அக்காலத்தில் தமது பகுதியில் இஸ்லாமிய பர்தாவில் தென்படக்கூடிய ஒரே பெண்மணியாகவும் இருந்துவந்தார். அல்லாஹ் மர்ஹுமாவின் தகுதியை உயர்த்துவானாக. அவருடன் அன்புடனும் மன்னிப்புடனும் நடந்துகொள்வானாக. அவரது கணவர் மற்றும் குழந்தைகளுக்கும் தைரியத்தையும் இழப்பை தாங்கிக்கொள்ளும் வாய்ப்பையும் வழங்குவானாக. எப்போதும் அவர்களின் கஷ்டங்களை விலக்குவானாக.

Nazarat Nashr-o-Isha'at — Translated By Muallim M. Muzammil